ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 11,576 — 1958 නොවැම්බර් 5 වැනි බදාදා — 5.11.1958

11,576 ம் இலக்கம் — 1958 ம் ஆண்டு கார்த்திகை மாதம் 5 ந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I: தொகுதி (I)—பொது

## விலைக் கட்டளைகள்

உணவு விலைக் கட்டளை இலக்கம் எம். எல். 1958/ஒ. உப உணவுப் பொருட்கள்.

### 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

#### கட்டளை

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவை அச்சட்டத்தின் 3 (2) ம் பிரிவுடன் சேர்த்து வாசிக்குமிடத்து எனக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக்கொண்டு மாத்தளை மாவட்ட உதவி விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு), பந்துல சோமசிரி த சில்வா ஆகிய யான் இக்கட்டளையால்—

1958 ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 22 ந் திகதியைக்கொண்ட 11,561 ம் இலக்க இலங்கை அரசாங்க விசேட வர்த்தமானப் பத்திரிகையில் 1958 ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 17 ந் திகதி பிரசுரிக்கப்பட்ட எம். எல். 1958/எம். இலக்கமுள்ள உணவு விலைக் கட்டளையை பின்வரும் முறையில் திருத்தியமைக்கிறேன்.

(அ) 2 ம் பந்தியில் " விலைகளை முறையே " என்னும் சொற்களுக்குப் பின்னும் " அந்தர் ஒன்றின் " என்னும் சொற்களுக்கு முன்னும் உள்ள " மொத்த " என்ற சொல்லை நீக்கி அதற்குப் பதிலாக " நிகர " என்ற சொல்லைப் புகுத்தவும் ;

(ஆ) 3 ம் பந்தியில் (அ) பிரிவில் " ஒரு பொருளை ஒரு " என்னும் சொற்களுக்குப் பின்னும் " அந்தரைக்கொண்ட " என்னும் சொற்களுக்கு முன்னும் உள்ள " மொத்த " என்ற சொல்லை நீக்கி அதற்குப்பதிலாக " நிகர " என்ற சொல்லைப் புகுத்தவும் ;

(இ) 3 ம் பந்தியில் (ஆ) பிரிவில் " ஒரு பொருளில் ஒரு " என்னும் சொற்களுக்குப் பின்னும் " அந்தருக்குக் குறைந்த " என்னும் சொற்களுக்கு முன்னும் உள்ள " மொத்த " என்ற சொல்லை நீக்கி அதற்குப் பதில் " நிகர " என்ற சொல்லைப் புகுத்தவும் ;

(ஈ) II ம் அட்டவணையின் 3 பந்தியின் தலைப்பில் உள்ள " மொத்த " என்ற சொல்லை நீக்கி அதற்குப் பதிலாக " நிகர " என்ற சொல்லைப் புகுத்தவும்.

1958 ம் ஆண்டு நவம்பர் மாதம் 1 ந் திகதி காலை 9.45 மணிக்கு மாத்தளையில் கையொப்பமிடப்பட்டது.

பந்துல எஸ். த சில்வா,
உதவி விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு),
மாத்தளை பரிபாலன மாவட்டம்.

---

உணவு விலைக் கட்டளை இல. எப். சீ. எம். 13. உப உணவுப் பொருட்கள் (செத்தல் மிளகாய்)

### 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

#### கட்டளை

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவை, அச்சட்டத்தின் 3 (2) ம் பிரிவுடன் சேர்த்துவாசிக்குமிடத்து எனக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக்கொண்டு உப விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு), யோன் வின்சன்ற் ஞானப்பிரகாசம் ஆகிய யான் இக்கட்டளையால்—

(1) 1958 ம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 19 ம் திகதியைக்கொண்ட 11,476 ம் இலக்க இலங்கை அரசாங்க விசேட வர்த்தமானப் பத்திரிகையில், 1958 ம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 18 ந் திகதியன்று பிரசுரிக்கப்பட்ட எப். சீ. எம். 9 ம் இலக்கமுள்ள உணவு விலைக் கட்டளையில் மொத்த வியாபாரியின் ஆகக்கூடிய மொத்த விலை, சில்லறை வியாபாரியின் ஆகக்கூடிய சில்லறை விலை முதலியவையைப் பொறுத்தமட்டில் குறித்த அட்டவணையில் முறையே 3 ம், 4 ம் பத்திகளில் காணப்படும் விலைகளையும் 2 ம் பத்தியில் குறிப்பிட்டுள்ள செத்தல் மிளகாய் பற்றிய எனது விலைக் கட்டளையையும் இத்திகதியிலிருந்து எடுத்துவிடுகிறேன் ;

(2) இதனோடிருக்கும் அட்டவணையின் 3 ம், 4 ம் பத்திகளில் விவரிக்கப்பட்டிருக்கும் விலைகளையே முறையே மொத்த அந்தர் ஒன்றின் மொத்த வியாபாரியின் ஆகக்கூடிய மொத்த விற்பனை விலையாகவும், நிகர இருத்தல் ஒன்றின் சில்லறை வியாபாரி ஒருவர் பாவிப்பாளர் ஒருவருக்கு விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலையாகவும் உடனடியாக விதிக்கிறேன். குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் நேரொத்த பதிவில் விவரிக்கப்பட்ட பொருளை இந்த விலைக்குக்கூடுதலாக புத்தளம் பரிபாலன எல்லைக்குள் விற்றலாகாது ;

(3) 1958 ம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 19 ந் திகதியைக்கொண்ட 11,476 ம் இலக்க இலங்கை அரசாங்க விசேட வர்த்தமானப் பத்திரிகையில் 1958 ம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 18 ந் திகதியன்று பிரசுரிக்கப்பட்ட உபஉணவுப் பொருட்கள் சம்பந்தப்பட்ட எப். சீ. எம். 9 ம் இலக்க உணவு விலைக் கட்டளையின் (3) ம் தொடக்கம் (8) ம் பந்திகள், இதனோடிருக்கும் அட்டவணையின் 2 ம் பத்தியில் குறிக்கப்பட்டுள்ள செத்தல் மிளகாயைப் பொறுத்த இக்கட்டளையுடன் சேர்க்கப்பட்டிருப்பதாகக் கருதப்பட வேண்டும் என ஆஞ்ஞையிடுகிறேன்.

1958 ம் ஆண்டு நவம்பர் மாதம் 1 ந் திகதி முற்பகல் 11 மணிக்குப் புத்தளத்தில் கையொப்பமிடப்பட்டது.

யோ. வி. ஞானப்பிரகாசம்,
உப விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு), புத்தளம்.

அட்டவணை

| பத்தி 1 | பத்தி 2 | பத்தி 3 | பத்தி 4 |
|---|---|---|---|
| எல்லை | விபரம் | மொத்த வியாபாரி அந்தர் ஒன்றை சில்லறை வியாபாரிக்கு விற்கும் ஆகக் கூடிய மொத்த விலை | சில்லறை வியாபாரி நிகர இருத்தல் ஒன்றை விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலை |
| | | ரூ. ச. | ரூ. ச. |
| பிற்றிகல் கோறளை தெற்குப் பிரிவு காரியாதிகாரியின் பிரிவிலுள்ள எல்லாப் பகுதிகளும் | செத்தல் மிளகாய் .. | 89 47 .. | 0 89 |
| பிற்றிகல் கோறளை வடக்குப் பிரிவு காரியாதிகாரியின் பிரிவிலுள்ள எல்லாப் பகுதிகளும் (உடப்பு புத்துளூஓய, புளிச்சாக்குளம் இல்லாமல்) | செத்தல் மிளகாய் .. | 89 87 .. | 0 89 |
| புத்தள நகர சங்க பிரிவும் பிற்றிகல் கோறளை வடக்கு பிரிவு காரியாதிகாரியின் பிரிவிலுள்ள உடப்பு பத்துளு ஓயா, புளிச்சாக்குளம் பிரிவுகள் | செத்தல் மிளகாய் .. | 91 66 .. | 0 90 |
| புத்தள நகர சங்க பிரிவு இல்லாமல் புத்தளம் பற்று கிரவட்ஸ் பிரிவு காரியாதிகாரியின் பிரிவிலுள்ள எல்லாப் பகுதிகளும் | செத்தல் மிளகாய் .. | 92 46 .. | 0 90 |
| ஏத்தாலே, ஆனமடுவ .. .. .. | செத்தல் மிளகாய் .. | 92 70 .. | 0 90 |
| (ஏத்தாலே தவிர) கற்பிட்டி பிரிவுக் காரியாதிகாரியின் பிரிவிலுள்ள எல்லாப் பிரிவுகளும் (ஆனமடுவ) தவிர மெலஹத் பத்து பிரிவு காரியாதிகாரியின் பிரிவிலுள்ள எல்லா பகுதிகளும் | செத்தல் மிளகாய் .. | 92 94 .. | 0 90 |

**குறிப்பு.**—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருள்களை விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகளல்ல. இவை **ஆகக்கூடிய** விலைகளாகும். இவ்விலைகளுக்கு மேலாக அப்பொருள்களை விற்றலாகாது.

---

உணவு விலைக் கட்டளை இலக்கம் KU/13/58. உப உணவுப் பொருட்கள்.

**1950 ம் ஆண்டின் 29 இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்**

**கட்டளை**

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவினாலும் 3 ம் பிரிவின் 2 ம் உட்பிரிவினாலும் எனக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு குருணாகல் மாவட்ட உதவி விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு), காடியே புஞ்சி ஹேவகே புத்ததாச டி சில்வா ஆகிய நான் இக்கட்டளையால்—

(1) 1958 ம் ஆண்டு ஆவணி மாதம் 19 ந் திகதியைக்கொண்ட 11,476 ம் இலக்க விசேட இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் 1958 ம் ஆண்டு ஆவணி மாதம் 15 ந் திகதி பிரசுரிக்கப்பட்ட KU/11/58 என்னும் இலக்கமுள்ள எனது உணவு விலைக்கட்டளையில் மொத்த வியாபாரியின் ஆகக்கூடிய மொத்த விலை, சில்லறை வியாபாரியின் ஆகக்கூடிய சில்லறை விலை முதலியவையைப் பொறுத்தமட்டில் குறித்த அட்டவணையில் முறையே 2 ம், 3 ம் பத்திகளில் காணப்படும் விலைகளையும் 1 ம் பத்தியில் குறிப்பிட்டுள்ள உருளைக்கிழங்கு பற்றிய எனது விலைக்கட்டளையை இத்திகதியிலிருந்து எடுத்துவிடுகிறேன்.

(2) இதனோடிருக்கும் அட்டவணையில் 2 ம், 3 ம் பத்திகளில் விபரிக்கப்பட்டிருக்கும் விலைகளையே முறையே நிகர அந்தர் ஒன்றின் மொத்த வியாபாரியின் ஆகக்கூடிய மொத்த விற்பனை விலையாகவும் நிகர இருத்தல் ஒன்றைச் சில்லறை வியாபாரி ஒருவர் பாவிப்பாளர் ஒருவருக்கு விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலையாகவும் உடனடியாக நடைமுறையில் வருமாறு விதிக்கின்றேன். குறித்த அட்டவணையின் நேரொத்த பதிவில் விபரிக்கப்பட்ட பொருளை இந்த விலைகளுக்குக் கூடுதலாக குருநாக்கல் பரிபாலன மாவட்ட எல்லைக்குள் விற்றலாகாது.

(3) இக்கட்டளையின் நோக்கத்திற்காக—

(அ) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளில் எத்தொகையையாவது, திருப்பி விற்பதற்காக விற்றல் அல்லது குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளை ஒரு நிகர அந்தரைக் கொண்ட தொகையில் அல்லது அதிற்கூடிய தொகையில் ஒரு தடவையில் விற்றல் மொத்த விற்பனையாகக் கருதப்படுமென்றும் ;

(ஆ) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட எப்பொருளையேனும் ஒரு நிகர அந்தருக்குக் குறைந்த எத்தொகையையாவது பாவிப்புக்காக அல்லது உபயோகத்திற்காக விற்றல் சில்லறை விற்பனையாகவே கருதப்படுமென்றும் ஆஞ்ஞையிடுகிறேன்.

(4) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட எப்பொருளையேனும், வேறொரு பொருளுடன் கலந்து எவராவது குருநாக்கல் பரிபாலன மாவட்டத்திற்குள் விற்றலாகாதென ஆஞ்ஞையிடுகிறேன்.

(5) குருநாக்கல் பரிபாலன மாவட்டத்திற்குள் குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட எப்பொருளையேனும் தம் வசத்தில் அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது அல்லது வாகனத்திலாவது வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில் அப்பொருட்களுக்கு இக்கட்டளையால் விதிக்கப்பட்ட ஆகக்கூடிய விலைகளைக் காட்டும் அறிவித்தல் ஒன்றை பகிரங்கமாகப் பார்வைக்கு வைத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(6) இக்கட்டளையின் நோக்கத்திற்காக "இருத்தல்" அல்லது "இரு." என்பது அவோர்டுபோஸ் எடுத்தலளவை முறையின் பிரமாண இருத்தல் நிறையாகக் கருதப்படுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(7) குருநாக்கல் பரிபாலன மாவட்டத்திற்குள் குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஏதாவதொரு பொருளை மொத்தமாக அல்லது சில்லறையாக விற்கும் ஒவ்வொருவரும் அப்பொருளை வாங்குவோர் கேட்குமிடத்து அன்னாருக்குப் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டுப் பற்றுச் சீட்டை கொடுத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் :—

(அ) விற்பனை நடந்த திகதி ;

(ஆ) விற்ற பொருளின் தொகை (நிறையில்) ;

(இ) விற்ற தொகைக்கு கொடுக்கப்பட்ட விலை ;

(ஈ) எவ்விதமான விற்பனை அதாவது மொத்த விற்பனையா அல்லது சில்லறை விற்பனையா என்பது ;

(உ) பொருளின் விபரங்கள்.

(8) குறித்த அட்டவணையில் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஏதாவதொரு பொருள் விற்குமிடத்து அவ்வட்டவணையின் 2 ம், 3 ம் பத்திகளிற் குறிக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய விலைகளில் அவ்வாறு விற்கப்படும் பொருளை சுற்றிக் கொடுக்கும் உறை அல்லது வைத்துக் கொடுக்கும் கொள்கலம் ஏதாவது உபயோகிக்கப்படின் அதன் விலையும் அடங்க வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(9) ஒல்லாந்திலிருந்து இறக்குமதியாகும் மரப் பெட்டிகளில் (கிறேற்ஸ்) அடைக்கப்பட்ட உருளைக்கிழங்கின் மொத்த இருத்தல் ஒன்றின் விற்பனை விலை ஒரு மரப் பெட்டிக்கு (கிறேற்றுக்கு) 10 இருத்தல் கழித்துக் கணக்கிடல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(10) சீனாவிலிருந்து இறக்குமதியாகும் மரப்பெட்டிகளில் (கிறேற்ஸ்) அடைக்கப்பட்ட உருளைக்கிழங்கின் மொத்த இருத்தல் ஒன்றின் விற்பனை விலை ஒரு மரப்பெட்டிக்கு (கிறேற்றுக்கு) 13 இருத்தல் கழித்துக் கணக்கிடல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(11) யப்பானிலிருந்து இறக்குமதியாகும் மரப்பெட்டிகளில் (கிறேற்ஸ்) அடைக்கப்பட்ட உருளைக் கிழங்கின் மொத்த இருத்தல் ஒன்றின் விற்பனை விலை ஒரு மரப்பெட்டிக்கு (கிறேற்றுக்கு) 25 இருத்தல் கழித்துக் கணக்கிடல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(12) மரப் பெட்டிகளல்லாத (கிறேற்ஸுகள்) மற்றைய எவ்வித கொள்கலத்திலோ இருந்து உருளைக்கிழங்கு விற்பனை செய்யப்படின் விற்பனை விலை ஒவ்வொரு கொள்கலத்திற்கும் மொத்த இருத்தலில் இருந்து 3 இருத்தல் கழித்துக் கணக்கிடல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(13) இக்கட்டளையின் பொருட்டு " நிகர " என்பது உருளைக் கிழங்கின் கழிவு அல்லது வெற்று நிறை குறைந்த மொத்த நிறையெனக் கருதப்படுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

1958 ம் ஆண்டு கார்த்திகை மாதம் 3 ந் திகதி, முற்பகல் 10 மணிக்கு குருநாக்கல் கச்சேரியில் கையொப்பமிடப்பட்டது.

ஜி. பி. எச். பீ. டி சில்வா,
உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு),
குருநாக்கல் மாவட்டம்.

**அட்டவணை**

| பத்தி 1 | பத்தி 2 | பத்தி 3 |
|---|---|---|
| விபரம் | மொத்த வியாபாரியின் நிகர அந்தர் ஒன்றின் ஆகக்கூடிய மொத்த விற்பனை விலை | சில்லறை வியாபாரி நிகர இருத்தல் ஒன்றை விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலை |
| | ரூ. ச. | ரூ. ச. |
| உருளைக் கிழங்கு .. .. | 29 84 .. .. | 0 32 |

**குறிப்பு.**—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருளை விற்க வேண்டுமென, விதிக்கப்பட்ட விலைகளல்ல ; இவை **ஆகக்கூடிய** விலைகளாகும். இவ்விலைகளுக்கு மேலாக அப்பொருளை விற்றலாகாது.

---

உணவு விலைக் கட்டளை இலக்கம் KU/14/58 **உப உணவுப் பொருட்கள்.**

## 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

### கட்டளை

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவினாலும் 3 ம் பிரிவின் 2 ம் உட்பிரிவினாலும் எனக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு குருநாகல் மாவட்ட உதவி விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு), காடியே புஞ்சி ஹேவகே புத்ததாச டி சில்வா ஆகிய நான் இக்கட்டளையால்—

(1) 1958 ம் ஆண்டு ஆவணி மாதம் 19 ந் திகதியைக் கொண்ட 11,476 ம் இலக்க விசேட இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 1958 ம் ஆண்டு ஆவணி மாதம் 15 ம் திகதியைக் கொண்ட KU/11/58 என்னும் இலக்கமுள்ள எனது உணவு விலைக் கட்டளையில் மொத்த வியாபாரிகளின் ஆகக்கூடிய மொத்த விலைகள், சில்லறை வியாபாரிகளின் ஆகக்கூடிய சில்லறை விலைகள் முதலியவையைப் பொறுத்தமட்டில், குறித்த அட்டவணையில் முறையே, 2 ம், 3 ம் பத்திகளில் காணப்படும் விலைகளையும், 1 ம் பத்தியில் குறிப்பிட்டுள்ள, செத்தல் மிளகாய் பற்றிய எனது விலைக் கட்டளையை இத்திகதியிலிருந்து எடுத்து விடுகிறேன்.

(2) இதனோடிருக்கும் அட்டவணையின் 2 ம், 3 ம் பத்திகளில் விபரிக்கப்பட்டிருக்கும் விலைகளையே முறையே மொத்த அந்தர் ஒன்றை மொத்த வியாபாரி ஒருவர் விற்கும் ஆகக்கூடிய மொத்த விலையாகவும், நிகர இருத்தல் ஒன்றைச் சில்லறை வியாபாரி ஒருவர் பாவிப்பாளர் ஒருவருக்கு விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலையாகவும், உடனடியாக நடைமுறையில் வருமாறு விதிக்கின்றேன். குறித்த அட்டவணையின் நேரொத்த பதிவில் விபரிக்கப்பட்ட பொருளை இந்த விலைகளுக்குக் கூடுதலாக குருநாகல் பரிபாலன மாவட்ட எல்லைக்குள் விற்றலாகாது.

(3) 1958 ம் ஆண்டு ஆவணி மாதம் 19 ம் திகதியைக்கொண்ட 11,476 ம் இலக்க விசேட இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் 1958 ம் ஆண்டு ஆவணி மாதம் 15 ம் திகதியன்று பிரசுரிக்கப்பட்ட உப உணவுப் பொருட்கள் சம்பந்தப்பட்ட KU/11/58 இலக்க உணவு விலைக் கட்டளையின் 3 தொடக்கம் 8 ம் பந்திகள் இதனோடிருக்கும் அட்டவணையின் 1 ம் பத்தியில் குறிப்பிட்டுள்ள செத்தல் மிளகாயைப் பொறுத்த இக்கட்டளையுடன் சேர்க்கப்பட்டிருப்பதாகக் கருதப்படவேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

1958 ம் ஆண்டு கார்த்திகை மாதம் 4 ம் திகதி, முற்பகல் 10 மணிக்குக் குருநாகல் கச்சேரியில் கையொப்பமிடப்பட்டது.

ஜீ. பி. எச். பீ. டி சில்வா,
உதவி விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு),
குருநாகல் மாவட்டம்.

**அட்டவணை**

| பத்தி 1 | பத்தி 2 | பத்தி 3 |
|---|---|---|
| விபரம் | மொத்த வியாபாரியின் மொத்த அந்தர் ஒன்றின் ஆகக்கூடிய மொத்த விற்பனை விலை | சில்லறை வியாபாரி நிகர இருத்தல் ஒன்றை விற்கும் சில்லறை விலை |
| | ரூ. ச. | ரூ. ச. |
| செத்தல் மிளகாய் .. .. | 88 49 .. .. | 0 88 |

**குறிப்பு.**—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருளை விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகளல்ல ; இவை **ஆகக்கூடிய** விலைகளாகும். இவ்விலைகளுக்கு மேலாக அப்பொருளை விற்றலாகாது.

உணவு விலைக்கட்டளை இலக்கம் R/14/1958. **உப உணவுப் பொருட்கள்.**

## 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

### கட்டளை

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவினாலும் அச்சட்டத்தின் 3 (2) ம் பிரிவினாலும், எனக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு இரத்தினபுரிமாவட்ட உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு), மத்தியாஸ் ஸ்ரீவன் கிளிட்டஸ் குணவர்த்தன ஆகிய நான் இக்கட்டளையால் :—

1958 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 22 ந் திகதியைக் கொண்ட 11,561 ம் இலக்க இலங்கை அரசாங்க விசேட வர்த்தமானப் பத்திரிகையில் 1958ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 20 ந் திகதி தமிழில் பிரசுரிக்கப்பட்ட R/12/1958 இலக்க முள்ள உணவு விலைக்கட்டளையை பின்வரும் முறையில் திருத்தியமைக்கிறேன்.

(அ) 2 ம் பந்தியை நீக்கி அதற்குப் பதில் கீழ்வருவனவற்றைப் புகுத்தவும் இதனோடிருக்கும் அட்டவணையின் 3 ம், 4 ம் பத்திகளில் விவரிக்கப்பட்டிருக்கும் விலைகளையே முறையே நிகர அந்தர் ஒன்றின் மொத்த வியாபாரியின் ஆகக்கூடிய மொத்த விற்பனை விலையாவும், நிகர இருத்தல் ஒன்றை சில்லறை வியாபாரி ஒருவர் பாவிப்பாளர் ஒருவருக்கு விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலையாகவும் விதிக்கிறேன். குறித்த அட்டவணையின் 2 ம் பத்தியில் நேரொத்த பதிவில் விவரிக்கப்பட்ட பொருளை இந்தவிலைக்குக் கூடுதலாக நேரொத்த 1 ம் பத்தியில் சொல்லப்பட்ட இடங்களில் விற்றலாகாது ;

(ஆ) 3 ம் பந்தியில் (அ) பிரிவில் " ஒரு பொருளை ஒரு " என்னும் சொற்களுக்குப் பின்னும், " அந்தரைக்கொண்ட " என்ற சொற்களுக்கு முன்னும் உள்ள " மொத்த " என்ற சொல்லை நீக்கி அதற்குப் பதிலாக " நிகர " என்ற சொல்லைப்புகுத்தவும் ;

(இ) 3 ம் பந்தியில் (ஆ) பிரிவில் " ஒரு பொருளில் ஒரு " என்னும் சொற்களுக்குப் பின்னும் " அந்தருக்குக் குறைந்த " என்னும் சொற்களுக்கு முன்னும் உள்ள " மொத்த " என்ற சொல்லை நீக்கி அதற்குப் பதிலாக " நிகர", என்ற சொல்லைப் புகுத்தவும் ;

(ஈ) அட்டவணையை நீக்கி அதற்குப் பதில் கீழ் வருவனவற்றைப் புகுத்தவும்.

1958 ம் ஆண்டு நவம்பர் மாதம் 4 ந் திகதி காலை 9 மணிக்கு இரத்தினபுரிக் கச்சேரியில் கையொப்பம் இடப்பட்டது.

எம். எஸ். சீ. குணவர்த்தன,
உதவிவிலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு),
இரத்தினபுரி மாவட்டம்.

### அட்டவணை

| பத்தி 1<br>இடம் | பத்தி 2<br>விபரம் | பத்தி 3<br>மொத்த வியாபாரியின் நிகர அந்தர் ஒன்றின் ஆகக்கூடிய மொத்த விற்பனை விலை<br>ரூ. ச. | பத்தி 4<br>சில்லறை வியாபாரி நிகர இருத்தல் ஒன்றை விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலை<br>ரூ. ச. |
|---|---|---|---|
| (1) (அ) இரத்தினபுரி நகராண்மைக் கழக எல்லை, (ஆ) பள்ள பத்து (கவரகிரிய வாசம நீங்கலாக) குக்குள் கோறளையில், (இ) குருவித்தை கோறளையில் உள்ள உடபத்து, கிராம விதானைப் பகுதிகளான (இறற்ற கிலிமலை தெற்கு, கிலிமலை வடக்கு, மற்றும் குடாவ கிராம விதானைப் பகுதிகள் நீங்கலாக) கரந்தனையும் மற்றும் களத்துவாவ கிழக்கும் | உருளைக்கிழங்கு .. | 30 00 .. | 0 33 |
| (2) குருவித்தை கோறளையில் உள்ள பள்ளபத்து (களத்துவாவ கிராமப் பகுதி நீங்கலாக) மெடபத்து (கரந்தான கிராமப் பகுதி நீங்கலாக) | உருளைக்கிழங்கு .. | 29 75 .. | 0 32 |
| (3) (அ) நவதுன் கோறளையிலுள்ள உடபத்து, மெடபத்து மற்றும் பள்ள பத்து, (ஆ) குக்குள் கோறளையில் உள்ள மெடபத்து | உருளைக்கிழங்கு .. | 30 15 .. | 0 34 |
| (4) (அ) பலாங்கொடை நகராண்மைக் கழக எல்லை, (ஆ) இரக்குவானை பட்டின சபை எல்லை, (இ) குருவித்தைக் கோறளையில் உள்ள கிராம விதானைப் பகுதிகளான இறற்ற, கிலிமலை வடக்கு, கிலிமலை தெற்கு, மற்றும் குடாவ, (ஈ) கடவத்த மெட கோறளையிலுள்ள கெலபற்ற பலாத்த, கெல உட பலாத்த (கல்தோட்ட வாசம் நீங்கலாக) மற்றும் உவேகம் பத்து, (உ) அட்டகலான் கோறளையிலுள்ள பனில் பத்து மெடபத்து, மற்றும் பள்ள பெற்ற கிராம விதானைப் பகுதி ; (ஊ) குக்குள் கோறளையிலுள்ள உடபத்து மற்றும் கவரகிரிய வாசம் | உருளைக்கிழங்கு .. | 30 25 .. | 0 35 |
| (5) (அ) கொலன்ன கோறளையிலுள்ள கொலன்னகம் பத்து மற்றும் தியபொத்தகம் பத்து, (ஆ) கடவத்தை கோறளையிலுள்ள தல்பித்தகம்பத்து, (இ) அட்டகலான் கோறளையிலுள்ள தேபத்து (பள்ளபத்த கிராம விதானைப் பகுதி நீங்கலாக), (ஈ) மெதகோறளையிலுள்ள கல்தோட்ட வாசம் | உருளைக்கிழங்கு .. | 30 50 .. | 0 36 |

**குறிப்பு.**—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருள்களை விற்க வேண்டுமென விதிக்கப்பட்ட விலைகள் அல்ல ; அவை **ஆகக்கூடிய விலைகளாகும். இவ்விலைகளுக்கு மேலாக அப்பொருள்களைவிற்றலாகாது.**